# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# மானியக் கோரிக்கை எண். 24

# சிறைச்சாலைகள்

# கொள்கை விளக்கக் குறிப்பு 2012–2013

## I. முன்னுரை

சமுதாயத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்காக, குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கி, சிறையிலிடப்பட்டு, சமுதாயத்தில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படா வண்ணம் பார்த்துக் கொள்ளப்படுகிறது. சிறையில் ஒரு குற்றவாளி இருக்கவேண்டிய காலம் அவர் செய்த குற்றத்தை அடிப்படையாகக் கொண்டு சட்டங்களுக்குட்பட்டு அமைகிறது. தவறு செய்தவர்கள் திருந்த பார்க்கணும் ஆனால் தப்பு செய்தவர்கள் வருந்தியாகணும் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலும், குற்றத்திற்கேற்ற தண்டனை என்ற கோட்பாட்டின் அடிப்படையிலும்தான் குற்றவியல் நீதிமுறையின் செயல்பாடு அமைகின்றது.

## II. நிர்வாக அமைப்பு:

அரசின் உள்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் சிறைத்துறை இயங்கி வருகிறது. காவல் துறை கூடுதல் இயக்குநர் பதவி

நிலையில் உள்ள முதுநிலை இந்திய காவல் பணி அதிகாரி ஒருவரின் தலைமையின்கீழ் இத்துறை இயங்கி வருகிறது.

இவருக்கு உதவியாக மாநிலத்தில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை ஆகியவற்றை தலைமையிடமாகக் கொண்ட நான்கு சரகங்கள் ஒவ்வொன்றிலும் சிறைத்துறைத் துணைத் தலைவர்களும், தலைமை அலுவலகத்தில் சிறைத்துறைத் துணைத் தலைவர் (தலைமையிடம்) ஒருவரும் உள்ளனர். சிறைத்துறையின் நிர்வாக கட்டமைப்பு இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. சிறைக் கண்காணிப்பாளர்களின் நிருவாக கட்டுப்பாட்டில், மத்தியச் சிறைகளும் அவற்றின் அதிகார வரம்பிற்குட்பட்ட கிளைச் சிறைகளும் இயங்கி வருகின்றன. சிறைத்துறைப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 5,147 ஆகும்.

தமிழ்நாட்டில் மொத்தம் 134 சிறைச்சாலைகள் உள்ளன. அவற்றுள் 9 மத்திய சிறைகளும், 3 பெண்களுக்கான தனிச் சிறைகளும், 9 மாவட்டச் சிறைகளும், 86 ஆண்களுக்கான கிளைச் சிறைகளும், 8 பெண்களுக்கான கிளைச் சிறைகளும், 2 ஆண்களுக்கான தனிக் கிளைச்சிறைகளும், 3 பெண்களுக்கான தனிக் கிளைச் சிறைகளும், 12 பார்ஸ்டல் பள்ளிகள் மற்றும் 2 திறந்த வெளிச் சிறைகளும் உள்ளன.

சென்னையில் முன்னர் செயல்பட்டு வந்த மத்திய சிறையில் சிறைவாசிகள் இருக்க போதிய இட வசதி

இல்லாததால், புதிதாக புழலில் **211** ஏக்கர் நிலப்பரப்பில் சிறைச்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மத்திய சிறை–I தண்டனை சிறைவாசிகளுக்காகவும், மத்திய சிறை–II விசாரணை சிறைவாசிகளுக்காகவும் மற்றும் பெண்களுக்கான தனிச் சிறைகளைக் கொண்டு **3,000** சிறைவாசிகளை அடைக்கத்தக்க இட வசதிகளைக் கொண்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.**848**, உள் (சிறை–4) துறை, நாள். **13.12.2011**–ல் புழல் சிறைச்சாலை வளாகத்தில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்த ரூ.**138.78** இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. அனைத்து சிறைகளையும் சேர்த்து சிறைவாசிகள் இருக்க அங்கீகரிக்கப்பட்ட இடவசதி **21,911** ஆகும்.

**ii) நன்னடத்தைப் பிரிவு:**

தமிழ்நாட்டிலுள்ள சிறைத்துறையின் நன்னடத்தைப் பிரிவானது நாட்டிலேயே சிறப்பான முறையில் அமைக்கப்பட்ட ஒரு பிரிவாகும். இப்பிரிவானது தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளரின் தலைமையின் கீழ் **12** மண்டல நன்னடத்தை அலுவலர்களையும், **80** நன்னடத்தை அலுவலர்களையும் கொண்டு செயல்படுகிறது. நீதிமன்றத்திற்காக குற்றவாளிகளின் நடத்தை மற்றும் அவர்களது வாழ்க்கை நிலைகள் குறித்து நன்னடத்தை

அலுவலர்கள் நேரடி விசாரணை செய்கிறார்கள். மேலும், நன்னடத்தையின் பேரில் விடுதலை செய்யப்படும் குற்றவாளிகளின் நடவடிக்கைகளை கண்காணித்து அவர்களின் மறுவாழ்விலும் கவனம் செலுத்துகின்றனர். முதன் முறையாகக் குற்றம் செய்யும் குற்றவாளிகளுக்கு தண்டனை அளித்து சிறைக்கு அனுப்புவதற்கு பதிலாக சில நிபந்தனைகளின் பேரில் அவர்களை நன்னடத்தையின் அடிப்படையில் விடுவிப்பது நன்னடத்தை அலுவலர்களின் முக்கியமான பணியாகும்.

**III. புதிய கட்டிடம் கட்டுதல்:**

அரசு ஆணை (நிலை) எண். 503, உள் (சிறை–4) துறை, நாள் 12.09.2011–ல் சிறைத்துறைக்கென்று ஒரு தலைமை அலுவலகம், எழும்பூர் வேனல்ஸ் சாலையில் கட்டுவதற்காக ரூ. 875.35 லட்சம் செலவில் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் கட்டுமானப் பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**IV. பயிற்சி மற்றும் மனித வளத்தினை மேம்படுத்துதல்:**

**சிறைக்காவலர்களுக்கான அடிப்படை பயிற்சி:**

தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம் இரண்டாம் நிலை சிறைக்காவலர்கள் தேர்வு

செய்யப்படுகின்றனர். அவர்களுக்கு வேலூரில் உள்ள சிறைக்காவலர் பயிற்சி மையத்தில், ஆறு மாதங்களுக்கு உடற்பயிற்சி, ஒழுங்குமுறை, மேலாண்மை, சீர்திருத்த முறைகள் ஆகியவற்றில் அடிப்படை பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. நவீனப் படைக்கலன்களைக் கையாளவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. குறிப்பாக உள்பயிற்சியின்போது சிறைவாசிகளின் மனித உரிமைகளின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தப்படுகிறது.

சமீபத்தில் இரண்டாம் நிலை சிறைக்காவலர்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) வேலூர் காவலர் பயிற்சி பள்ளியில் அடிப்படை பயிற்சி பெற்றுள்ளனர். ஆயுதமின்றி தனித்து நின்று போராடவும், வெடிகுண்டுகளை கண்டறிந்து அவற்றைச் செயலிழக்கச் செய்யவும், அதிரடி பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி போன்ற பல்வேறு பயிற்சிகளை பெறுவதற்காகவும், சென்னை மருதம் கட்டிடத்திலுள்ள காவல் துறை அதிரடிப்படைப் பயிற்சிப் பள்ளிக்கு சிறைக்காவலர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

சிறைக்காவலர்களுக்கு அளிக்கப்படும் அடிப்படை பயிற்சிமட்டுமல்லாது, தலைமை சிறைக் காவலர்கள், உதவி சிறை அலுவலர்கள் மற்றும் துணை சிறை அலுவலர்களுக்கும் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை புத்தாக்கப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

**சிறை மற்றும் நிர்வாக சீர்த்திருத்த பயிற்சியகம் (ஆப்கா), வேலூர்:**

சிறை மற்றும் நிர்வாக சீர்த்திருத்த பயிற்சியகம் (ஆப்கா), தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம் மற்றும் கேரளம் ஆகிய நான்கு தென் மாநிலங்களை சேர்ந்த சிறை பணியாளர்களுக்கு பயிற்சியினை அளிப்பதற்கான வசதிகளுடன் அமையப்பெற்றுள்ளது. இந்நிறுவனம், 1979–ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் செலவினத்தை நான்கு மாநிலங்களும் ஆண்டிற்கு தலா ரூ. 50.00 இலட்சம் வழங்கி பகிர்ந்துகொள்கின்றன.

இந்நிறுவனம் தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம் மற்றும் கேரளம் ஆகிய நான்கு தென் மாநிலங்களைச் சேர்ந்த சிறைத்துறை அதிகாரிகளுக்கு சிறை மேலாண்மை மற்றும் குற்றவாளிகளை சீர்திருத்தும் முறைகள் ஆகியவற்றில் பயிற்சியளித்து வருகிறது.

**இதர பயிற்சி திட்டங்கள்:**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சிகளைத் தவிர காவல் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் புதுடில்லி, தேசிய மனித உரிமைகள் ஆணையம், புதுடில்லி, தேசிய தடய அறிவியல் நிறுவனம், புதுடில்லி, தேசிய சமூகப் பாதுகாப்பு நிறுவனம், புதுடில்லி, தேசிய குற்ற ஆவணங்கள் கழகம்,

புதுடில்லி ஆகியவற்றால் நடத்தப்படும் மனித உரிமைகள் மற்றும் சிறை மேலாண்மை முதலியவற்றில் தேசிய அளவிலான பயிற்சி வகுப்புகளுக்கும் அதிகாரிகள் அனுப்பி வைக்கப்படுகின்றனர். 2011–2012–ஆம் ஆண்டில், பல்வேறு பயிற்சி திட்டங்களில் 110 அதிகாரிகள் பயிற்சி பெற்றனர்.

தமிழக அரசு, அரசாணை எண்.781, உள் (சிறை–1) துறை, நாள். 17.11.2011 மூலம் சிறைத்துறையில் 9 உளவியல் நிபுணர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறைவாசிகள் மற்றும் வன்முறை செயல்களில் ஈடுபடும் குணம் கொண்ட சிறைவாசிகள் ஆகியோருக்கு கலந்துரையாடல் செய்திட இந்த உளவியல் நிபுணர்களின் பணிகள் பயன்படுத்தப்படும்.

**பாதுகாப்பு:**

**உயர்பாதுகாப்பு தொகுதிகள்:**

சிறைவாசிகளை சீர்திருத்துவது சிறைத்துறையின் முக்கியமான குறிக்கோளாக இருப்பினும் சிறைவாசிகளின் பாதுகாப்பு மற்றும் சிறைவாசிகள் சிறையிலிருந்து தப்பிப்பதை தடுப்பது ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. மத்திய சிறைகளில் உயர் பாதுகாப்பு தொகுதிகள் கட்டப்பட்டுள்ளன. கடுங்குற்றங்களில் ஈடுபட்ட சிறைவாசிகள் மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த வழக்குகளில்

சம்மந்தப்பட்ட சிறைவாசிகள் பல்வேறு சிறைகளில் உள்ள உயர்பாதுகாப்பு கட்டடத் தொகுதிகளில் அடைக்கப்படுகின்றனர். இந்த உயர்பாதுகாப்பு கட்டடத் தொகுதிகளின் உட்புறம் சிறைக்காவலர்களாலும், வெளிப்புறம் தமிழ்நாடு காவல் துறையினராலும் பாதுகாக்கப்படுகின்றன. மேற்கண்ட சிறைவாசிகள், அன்றாடச் சோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் உயர் அலுவலர்களாலும் ஆய்வு செய்யப்படுகின்றனர். இந்த உயர்பாதுகாப்பு தொகுதியானது மிகுந்த அச்சுறுத்தலை ஏற்படுத்தும் சிறைவாசிகளிடமிருந்து பிற சிறைவாசிகளை தனித்து வைக்கப்படுவதற்கு உதவி செய்வது மட்டும் அல்லாமல் மிக கடுமையான பாதுகாப்பினையும் வழங்குகிறது.

உயர்பாதுகாப்பு தொகுதி சிறைவாசிகளை பார்வையிட வரும் பார்வையாளர்களை சோதனையிடும் முறைகள் மிகவும் கடுமையானவையாகும். இச்சிறைவாசிகளை காண வரும் பார்வையாளர்கள், அவர்களை காண்பதற்கு முன்னரும், பின்னரும் காவல் துறையினரால் தீவிரமாகப் பரிசோதிக்கப்படுவது சிறைத்துறையினரால் செய்யப்படும் தொடர் பரிசோதனைக்கு உதவியாக உள்ளது. சிறைகளில், விரும்பத்தகாத நிகழ்வுகள் ஏற்படாமல் தடுக்கவும், சிறைவாசிகள் தப்பித்து விடாமல் பாதுகாக்கவும், நாச வேலைகளைத் தடுத்தல் குறித்த பரிசோதனைகளும்

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மோப்ப நாய் பிரிவு சிறைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தி உள்ளது.

கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், சிறைவாசிகளுக்கு உரிய மதிப்பினை அளிப்பதில் எந்தவித சமரசத்திற்கும் இடம்தராமல் இருப்பதற்கு கவனம் செலுத்தப்படுகிறது. சிறைவாசிகளின் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படுவதுடன் சிறைப்பணியாளர்களுக்கு அளிக்கப்படும் அனைத்து பயிற்சிகளிலும் இந்த நோக்கம் வலியுறுத்தப்படுகிறது.

**ஊடுகதிர் அலகிடல் கருவி:**

சிறைக்குள் தடைசெய்யப்பட்ட பொருட்களான போதை பொருட்கள், ஆயுதங்கள் போன்றவை சிறைக்குள் கடத்தப்பட்டால் சிறையின் பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படும். இதனை தடுக்கும் விதமாக ரூ.40.40 இலட்சம் செலவில் இரண்டு ஊடுகதிர் அலகிடல் கருவிகள் வாங்குவதற்கு, அரசாணை (நிலை) எண். 285, உள் (சிறை–4) துறை, நாள். 25.05.2011–ல் அரசு ஆணையிட்டுள்ளது.

**சிறைகள் மற்றும் நீதிமன்றங்களில் காணொளி கலந்துரையாடல் வசதிகளை விரிவுபடுத்துதல்:**

ஒரு முன்னோடி நடவடிக்கையாக காணொளி கலந்துரையாடல் மூலம் சிறைகளையும் நீதிமன்றங்களையும் இணைக்கும் வசதி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 01.07.2004 அன்று துவக்கிவைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் சிறைவாசிகளின் நீதிமன்றக்காவலை அவர்களை நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்படுத்தாமல் நீட்டிக்க இயலும். இதன் மூலம் சிறைவாசிகள் தப்பித்தல் போன்ற அசம்பாவித நிகழ்வுகள் ஏற்படுவது தடுக்கப்படுவதோடு அல்லாமல் வழிக்காவல் மற்றும் வாகனங்களுக்காக ஆன செலவு ஆண்டொன்றிற்கு தோராயமாக ரூ.3.00 கோடி குறைந்துள்ளது. இதுவரை காணொளி கலந்துரையாடல் மூலம் 6,50,171 சிறைவாசிகளின் விசாரணை காலம் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் காணொளி கலந்துரையாடல் வசதி அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச்சிறைகளில் 17 இடங்களிலும் மற்றும் 64 நீதிமன்ற வளாகங்களிலும் ஏற்படுத்தப்பட்டு 276 நீதிமன்றங்களை சிறைகளுடன் இணைத்துள்ளது. அரசாணை (நிலை) எண். 523, உள்துறை, நாள். 16.09.2011ன்படி ரூ.312 இலட்சம் செலவில் கூடுதலாக காணொளி

கலந்துரையாடல் வசதி ஏற்படுத்திட அரசு அனுமதி அளித்துள்ளது. இதனால் சிறைவாசிகளின் விசாரணை காலம் நீட்டிக்கும் வசதி மேலும் எளிதாக்கப்பட்டுள்ளது.

## V. சுகாதாரம் மற்றும் சிறைவாசிகளின் நல்வாழ்வு:

### உணவு மற்றும் உடை :

தமிழ்நாடு சிறை நடைமுறை நூல் தொகுதி II அத்தியாயம் 22ல் வரையறுக்கப்பட்ட அளவின்படி, சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படும் நல்ல உணவு சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகிறது. நோய்வாய்ப்பட்ட சிறைவாசிகளுக்கு சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில், மருத்துவ உணவாக பால், ரொட்டி, முட்டை மற்றும் கோழி இறைச்சி முதலியன வழங்கப்படுகின்றன. இதுதவிர அசைவ உணவு சாப்பிடும் அனைத்து சிறைவாசிகளுக்கும் வாரம் ஒரு முறை 115 கிராம் கோழி இறைச்சியும், சைவ உணவு சாப்பிடும் சிறைவாசிகளுக்கு வாரம் ஒரு முறை உருளைக்கிழங்கு கறி, கேசரி மற்றும் ஒரு வாழைப்பழம் ஆகியவையும் வழங்கப்பட்டு வருகிறது. தூய்மையை உறுதிப்படுத்த சிறைவாசிகளுக்கு எவர்சில்வர் தட்டுகள் மற்றும் குவளைகள் வழங்கப்படுவதோடு எவர் சில்வர் சமையல் பாத்திரங்களும், உணவினை எடுத்துச்

செல்ல தள்ளு வண்டிகளும் சிறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதுபோலவே, பெண் சிறைவாசிகளுக்கும் ஆரோக்கியமான உணவு வழங்கப்படுகிறது. தாய்மையடைந்த பெண் சிறைவாசிகளுக்கு கூடுதலாக பால் வழங்கப்படுகிறது. பெண் சிறைவாசிகளுடன் உள்ள குழந்தைகளுக்கு பால், ரொட்டி, வாழைப்பழம் மற்றும் குழந்தைகளுக்கான உணவும் அரசின் செலவிலேயே வழங்கப்படுகிறது. ஆடைகள் மற்றும் படுக்கைகள் சிறை நடை முறை நூலில் வரையறுக்கப்பட்டுள்ளபடி வழங்கப்படுகின்றன.

தண்டனை சிறைவாசிகளுக்கு டெரிகாட்டன் சட்டைகள், அரைக்கால் சட்டைகள் மற்றும் பெரிய அளவிலான தரை விரிப்புகள் வழங்கப்படுகின்றன. போதுமான உடை இல்லாமலிருக்கும் விசாரணை சிறைவாசிகளுக்கு போதிய உடைகள் வழங்கப்படுகின்றன. மத்திய சிறைகளிலும், கிளை சிறைகளிலும் சிறந்த வாழும் சூழலை உறுதிசெய்வதற்காக அடிப்படை வசதிகளும் துப்புரவு வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன.

**சிறைவாசிகளின் சீருடையில் மாற்றம்:**

சிறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள ‘ஆ’ வகுப்பு தண்டனை சிறைவாசிகளுக்கான சீருடையை அரைக்கால்

சட்டையிலிருந்து முழுக்கால் சட்டையாக ரூ. 5.85 லட்சம் செலவில் மாற்றி வழங்கிட அரசு ஆணை (நிலை) எண். 115, உள் (சிறை.3) துறை, நாள். 27.1.2012 மூலம் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**சிறைவாசிகளின் ஊதிய உயர்வு:**

சிறையில் உள்ள தொழிற்கூடங்களில் பணியாற்றும் தண்டனை சிறைவாசிகள் செயற்திறன் பெற்றோர், ஓரளவு செயற்திறன் பெற்றோர், செயற்திறன் பெறாதோர் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளனர். இதற்கு முன்னர் நாள் ஒன்றுக்கு அவர்களுக்கு முறையே ரூ. 60/– ரூ. 50/– மற்றும் ரூ.45/– ஊதியமாக வழங்கப்பட்டு வந்தது. தற்போது அரசாணை (நிலை) எண். 691, உள் (சிறை.3) துறை, நாள். 28.10.2011ல் இந்த ஊதிய விகிதம் கீழ்க்கண்டவாறு உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

- செயற்திறன் பெற்றோர் ரூ. 100/–
  (நாள் ஒன்றுக்கு ஒரு சிறைவாசிக்கு)
- ஓரளவு செயற்திறன் பெற்றோர் ரூ. 80/–
  (நாள் ஒன்றுக்கு ஒரு சிறைவாசிக்கு)
- செயற்திறன் பெறாதோர் ரூ. 60/–
  (நாள் ஒன்றுக்கு ஒரு சிறைவாசிக்கு)

**சுத்தம் மற்றும் சுகாதாரத்தைப் பேணுதல்:**

இம்மாநிலத்தில் உள்ள அனைத்து மத்திய சிறைகளிலும் உள்ள மருத்துவ மனைகளில், சிறைவாசிகளுக்கு சிகிச்சை அளிக்க போதிய மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகள் உள்ளன. இந்த மருத்துவ மனைகளில் நன்கு பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம்மிக்க மருத்துவ அலுவலர்களால் சிறைவாசிகள் வெளி நோயாளிகளாகவும், உள் நோயாளிகளாகவும் அனுமதிக்கப்பட்டு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது. அனைத்து மத்திய சிறைகள், பெண்களுக்கான தனிச் சிறைகள், பெண்கள் கிளைச் சிறைகள் மற்றும் தனிக் கிளை சிறைகள் அனைத்துக்கும் அவசர சிகிச்சை ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், மத்திய சிறைகளில் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக, மருத்துவ பரிசோதனைக் கூடங்கள், இதயத்துடிப்பை அறிய உதவும் சாதனங்கள் (E.C.G), இரத்தத்தை ஆய்வு செய்யும் தானியங்கி கருவிகள், கண்பார்வை பரிசோதனை செய்யும் கருவி (Opthalamoscope), இரத்தத்தில் சர்க்கரையின் அளவை கண்டறியும் கருவி (Glucometer) மற்றும் எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய எக்ஸ்–கதிர் படமெடுக்கும் கருவிகள் ஆகியவை வழங்கப்பட்டு சிறைவாசிகளின் நோய்களின்

தன்மைகள் கண்டறியப்பட்டு வருகிறது. இதுதவிர குறிப்பிட்ட உடல் உபாதைகள் உள்ள சிறைவாசிகளுக்கு குறித்தகால இடைவெளியில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. மனநல சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகள், சென்னை, அரசு மனநலக் காப்பகத்தில் அனுமதிக்கப்பட்டு, அங்கு அவர்களுக்கு போதுமான சிகிச்சை அளிக்கப்படுகிறது.

நல்வாழ்வு நடவடிக்கையாக, சிறைகளில் புகை பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. பெண் சிறைவாசிகளுக்கு இலவச 'சானிட்டரி நாப்கின்களும்' வழங்கப்படுகின்றன. சிறைவாசிகளுக்கிடையே, எச்.ஐ.வி (HIV) பரிசோதனை செய்வதற்காக, அனைத்து மத்திய சிறைகளிலும் பரிசோதனை மையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அனைத்து சிறைவாசிகளும் உரிய ஆலோசனைக்குப் பின்னர், எய்ட்ஸ் நோய்க்கான பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

**குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுடன் சிறைவாசிகள் நேர்காணல்:**

உரிய நடைமுறையை பின்பற்றி சிறைவாசிகள் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களை சந்திக்க அனுமதிக்கப்படுகின்றனர். இதற்கான விண்ணப்பப் படிவங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும்

இப்படிவத்தினை சிறைத்துறை இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**சிறைவாசிகள் உறவினர்களுடன் பேசுவதற்காக சிறைகளில் தொலைபேசி வசதி அறிமுகப்படுத்துதல்:**

சிறைவாசிகளின் நீண்ட கால கோரிக்கையை ஏற்கும் வகையிலும், சிறைகளில் சிறைவாசிகள் தமது உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் தொலைபேசியில் பேசுவதற்கு ஏதுவாகவும், வழக்கு சம்மந்தமாக வழக்குரைஞர்களுடன் பேசுவதற்கும் சிறைகளில் மறைமுகமாக செல்லிடத்து பேசியின் பயன்பாட்டை தடுக்கும் வகையிலும் அரசாணை (நிலை) எண். 524, உள் (சிறை–3) துறை, நாள். 16.09.2011–ல் ரூ.158.00 இலட்சம் செலவில் 9 மத்திய சிறைகள், 3 பெண்கள் தனிச்சிறை மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி ஆகியவற்றில் 54 தொலைபேசிகூடங்கள் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. இதன்மூலம் சில வரன்முறைக்கு உட்பட்டு சிறைவாசிகள் சிறைகளிலிருந்தே தொலைபேசியில் பேச முடியும். இதற்கான பணிகள் எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**பொழுதுபோக்கு:**

“ஆக்கமற்ற மனம் தீயவற்றின் பிறப்பிடமாகும்” எனும் சொல் வழக்கத்திலுள்ளது. எனவே சிறைவாசிகளின் மனதை

மாற்ற பொழுது போக்கிற்காக உள்ளரங்கு மற்றும் வெளியரங்கு விளையாட்டு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வசதியானது பொழுதுபோக்கு அம்சங்களை வழங்குவதோடு அல்லாமல் அவர்களின் இறுக்கமான மனநிலையை மாற்ற வழிவகுக்கிறது. இவ்வசதியானது சிறைவாசிகளின் உடல் நலம் மற்றும் மன நலத்திற்கு வழிவகுக்கும்.

அனைத்து சிறைகளிலும் சிறந்த வசதிகளுடன் கூடிய நூலகங்கள் செயல்பட்டுவருகிறது. இந்நூலகங்களிருந்து சிறைவாசிகள் புத்தகங்களைப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். மேலும் மாவட்ட நூலகங்களிலிருந்தும் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**சிறைவாசிகளின் கல்வி மற்றும் வாழ்க்கைத் தரம் உயர்வு:**

கல்வி மனத்தினை நன்னெறிப்படுத்த உதவுகிறது. அது மட்டுமின்றி சிறைவாசிகள் விடுதலைக்குப் பின் இக்கல்வியறிவினால் பெற்ற திறனை பயன்படுத்தி வேலைவாய்ப்பினை பெறலாம். இதனை கருத்தில் கொண்டு சிறைவாசிகளின் அனைத்து செயல்களில் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. ஒவ்வொருவரின் தகுதிக்கேற்ப (i) ஆரம்பக்கல்வி (ii) தொடக்கக்கல்வி (iii) மேல்நிலைக் கல்வி (iv) திறந்த வெளி பல்கலைக்கழகங்கள்

மூலமாக பட்டப்படிப்பு மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு (v) சிறைவாசிகளுக்கு வேலைவாய்ப்பு சார்ந்த பயனுள்ள தொழிற்கல்வி என வகைப்படுத்தப்பட்டு சிறைவாசிகளுக்கு கல்வி கற்பிக்கப்படுகிறது. ஆசிரியர் பணிக்கு தகுதி பெற்ற சிறைவாசிகளை கொண்டும் சிறையில் வகுப்புகள் நடத்தப்படுகிறது. சிறைவாசிகளிடையே 100 சதவீத கல்வியை அளிக்க வேண்டி, மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகமும், தமிழ்நாடு கல்வித்துறையும் ஒருங்கிணைந்து திட்டம் ஒன்றை தொடங்கியுள்ளது. இந்திராகாந்தி திறந்தவெளி பல்கலைக்கழகமும் சிறைவாசிகள் பயன்பெறும் வகையில் சில பாடப்பிரிவுகளை (certain courses) நடத்திவருகிறது.

2011–2012 ஆம் ஆண்டில் மொத்தம் 2,374 தண்டனை சிறைவாசிகள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பல்வேறு படிப்புகளை தொடர்ந்து பயின்று வருகின்றனர்.

| **பாடப்பிரிவு** | **கற்கும் மொத்த சிறைவாசிகள்** |
|---|---|
| அடிப்படைக் கல்வி<br>(7ஆம் வகுப்பு வரை ஆயத்த படிப்பு) | 1604 |
| கணினி முதுகலை பட்டப்படிப்பு | 3 |
| கலை / அறிவியல் முதுகலை பட்டப்படிப்பு | 15 |

| | |
|---|---|
| கலை / அறிவியல் / வணிகவியல் இளங்கலை பட்டப்படிப்பு | 113 |
| வணிக மேலாண்மை முதுகலை பட்டப்படிப்பு | 7 |
| வணிக மேலாண்மை இளங்கலை பட்டப்படிப்பு | 9 |
| இலக்கியப் பட்டப்படிப்பு | 1 |
| 8 முதல் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு | 209 |
| சமுதாய கல்லூரி | 339 |
| சான்றிதழ் படிப்பு | 33 |
| அடிப்படை ஆயத்தப் படிப்பு | 41 |
| **மொத்தம்** | **2,374** |

**மகாத்மா காந்தி சமுதாயக்கல்லூரி:**

பட்டய படிப்பிற்காக மட்டும் தமிழ்நாடு திறந்த வெளி பல்கலைகழகத்தால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட மகாத்மா காந்தி சமுதாயக்கல்லூரி சிறைத்துறையில் பல்வேறு இடங்களில் நிறுவப்பட்டது. முதன்முதலில் புழல்–1, மத்திய சிறையில் தொடங்கி வைக்கப்பட்டு, பின்னர் 8 மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளி ஆகியவற்றில் இக்கல்லூரி விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. சிறைவாசி தம் திறனை வளர்க்கவும் அவர்கள் விடுதலைக்கு பின் வேலைவாய்ப்பினைப் பெற்று கௌரவமான வாழ்க்கை

நடத்தவும், 9 வகையான பட்டய படிப்புகள் அளிக்கப்படுகின்றன. தற்போது இக்கல்லூரியில் 339 சிறைவாசிகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**இலவச சட்ட உதவி:**

சிறைவாசிகளுக்கு இலவச சட்ட உதவிகள் அளிக்கப்படுகின்றன. சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆணைக்குழு, அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச்சிறைகளில் இலவச சட்ட உதவி மையம் அமைத்துள்ளது.

**குறை தீர்த்தல்:**

சிறைவாசிகள், தங்கள் குறைகளைத் தெரிவிக்க ஏதுவாக, அனைத்து மத்திய சிறைகளிலும், மூடி முத்திரையிடப்பட்ட புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் முதல் பணி நாளன்று மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியால் இந்த புகார் பெட்டிகள் திறக்கப்பட்டு புகார்கள் உரிய நடவடிக்கைக்காக சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இதுதவிர அமர்வு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நடுவர்களும் மாதம் ஒருமுறை சிறைகளுக்குத் திடீர் வருகை புரிந்து சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் இதர

வசதிகளை சரிபார்ப்பதுடன் அவர்களின் குறைகள் குறித்தும் விசாரணை செய்கிறார்கள். கூடுதல் காவல்துறை இயக்குநர்/சிறைத்துறைத் தலைவரும், சரக சிறைத்துறைத் துணைத் தலைவர்களும், வருடாந்திர ஆய்வு செய்யும் போது, ஒவ்வொரு சிறைவாசிகளிடமும் அவர்கள் குறைகள் குறித்து விசாரித்து அவற்றை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

**மனித உரிமை பாதுகாப்பு:**

சிறைவாசிகளின் மனித உரிமைகளைப் பாதுகாத்திட சிறை அலுவலர்களின் அனைத்து பயிற்சிகளிலும் அவர்களின் புத்தாக்கப் பயிற்சிகளிலும் சிறைவாசிகளின் மனித உரிமை பாதுகாப்பு குறித்து போதிய பயிற்சியளிக்கப்படுகிறது. சிறந்த நிருவாகம் மற்றும் சிறைவாசிகள் நடத்தப்படும் முறை குறித்து உறுதி செய்து கொள்வதற்காக அலுவல் சார்ந்த பார்வையாளர்கள், குறித்த காலத்திற்கொருமுறை சிறைகளுக்கு வருகை புரிகின்றனர். சிறைவாசிகளுக்கு அடிப்படைத் தேவைகள் அளிக்கப்படுவதையும், அவர்கள் உரியவாறு நடத்தப்படுவதையும் உறுதி செய்து கொள்வதற்காக மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர்கள், மாண்புமிகு நீதிபதிகள் மற்றும் இதர முக்கிய பிரமுகர்களும் சிறைகளைப் பார்வையிடுகின்றனர். இது தவிர, சிறைகளைத் திடீர்

பார்வையிட்டு அங்கு மனித உரிமை மீறல்கள் உள்ளனவா என்றும் உறுதிசெய்திட பொதுமக்களில் சிலரும் அலுவல் சாரா பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்கள் மற்றும் மாண்புமிகு நீதிபதிகளும், சிறைகளுக்கு வருகை புரிந்து இம்மாநிலத்தின் சிறை நிருவாகத்தை பாராட்டி உள்ளனர்.

## VI. சிறைவாசிகளின் மறுவாழ்வு மற்றும் சமுதாயத்தில் மீண்டும் இணைந்து வாழ்தல்:

### அரசு சாரா நிறுவனங்களின் பங்கேற்பு:

சிறைவாசிகளின் உடல் நலன் மற்றும் மன நலனை மேம்படுத்த அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடன் சிறைகளில் யோகாசனம், தியானப்பயிற்சி ஆகியவை நடத்தப்பட்டு வருகிறது. சிறைகளில் யோகாசனம், தியானம், கலந்துரையாடல், ஒழுக்கவியல் குறித்த விரிவுரை, இலவச மருத்துவ சிகிச்சை முகாம் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி போன்றவற்றை அளிக்க தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

**சிறை தொழிற்சாலைகள் மற்றும் தொழிற் பயிற்சி கல்வி பெறுதல்:**

சிறைவாசிகளின் தண்டனை காலம் முடிவுற்று, அவர்கள் சிறைகளிலிருந்து விடுதலை அடைந்து சென்ற பின்னர், மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடாமல் இருப்பதற்காக, விடுதலைக்குப் பின்னர் அவர்கள் வேலை வாய்ப்புபெற அவர்களது தண்டனை காலத்திலேயே வாழ்வாதாரத்திற்கு தேவைப்படும் தொழில்களில் உரிய பயிற்சிகள் அளிப்பதற்கு சிறைத்துறையால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் சிறைகளில் சிறைவாசிகளின் தண்டனை காலத்தில் அவர்களது மன நிலையைச் சீர்படுத்தி, அவர்களது பணித் திறனை மேம்படுத்த, சிறைகளில் இயங்கும் முத்திரை அரக்கு, நெசவுப் பிரிவு, கைமுறை காகிதக்கூடம், புத்தகம் கட்டுதல், காலணி தொழிற்கூடம், தையற்கூடம், கோர்ப்பான்கள் உற்பத்தி தொழிற்கூடம் போன்ற பல்வேறு தொழிற் கூடங்களில் சிறைவாசிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு சிறைசெய் பொருட்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

சிறைத்துறை ஒரு ‘சேவைத்துறையாக’ அறிவிக்கப்பட்டு அரசுத்துறைகளுக்கு பொருள் வழங்குவதில் தனிச் சிறப்பு பெற்றுள்ளது. இத்துறையின் சிறைத் தொழிற்கூடங்களில், முத்திரை அரக்கு, கோர்ப்பான், கோப்பு

அட்டை, தபால் உறை, கட்டுத்துணி, காரத்துணி, மருந்து பெட்டகங்கள் (Bed-side Lockers) மற்றும் தீ வாளிகள், காவல்துறை, சிறைத்துறை மற்றும் தீயணைப்புத்துறை பணியாளர்களுக்கான சீருடைத்துணி மற்றும் காலணிகள் ஆகியவை தயாரிக்கப்பட்டு பல்வேறு அரசுத் துறைகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் சிறைத் தொழிற் கூடங்களின் சராசரி உற்பத்தி மதிப்பு ஆண்டொன்றுக்கு தோராயமாக ரூபாய் நான்கு கோடி ஆகும்.

## VII. பணியாளர்கள் நலன்:

**பதக்கங்கள்:**

சிறைத்துறையில் சிறைப் பணியாளர்கள் அவர்களுடைய பணிக்காலத்தில் நேர்மையுடனும், திறமை, நாணயம் மற்றும் உயரிய கடமை பற்றுறுதியை போற்றத்தக்க வகையில் பணிகள் செய்வோரது திறமையைப் பாராட்டி அத்தகையோருக்கு கீழ்க்கண்ட பதக்கங்கள் வழங்கப்படுகின்றன.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சிறைச்சாலை சேவைக்கான சிறப்புப் பதக்கம்:**

**அண்ணா பதக்கம்:**

ஒவ்வொரு ஆண்டும் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு அண்ணா பதக்கம் 10 நபர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும் இப்பதக்கம் பெறும் பணியாளர்களுக்கு அரசாணை (நிலை) எண். 890, உள் (எஸ்.சி) துறை, நாள். 20.12.2011–ன்படி ஒட்டுமொத்தத் தொகையாக பதவிக்கு ஏற்றவாறு கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது.

1. சிறை அலுவலர் முதல் சிறை கண்காணிப்பாளர் வரை ரூ. 10,000/–.
2. உதவி சிறை அலுவலர் மற்றும் துணை சிறை அலுவலர்களுக்கு ரூ. 6,000/–.
3. முதல் தலைமைக் காவலர் முதல் இரண்டாம் நிலை காவலர்கள் வரை ரூ. 4,000/–.

**தமிழ்நாடு முதலமைச்சரின் நற்பணி பதக்கம்:**

**பொங்கல் பதக்கம்:**

இப்பதக்கமானது 60 முதல் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு அவர்களுடைய பணிக்காலத்தில் ஆண்டுதோறும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வழங்கப்படுகிறது. இப்பதக்கம் பெறும் பணியாளர்களுக்கு

அவர்களுடைய பதவிக்கு ஏற்றவாறு மாதாந்திர பதக்க படியாக கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது.

- ❖ முதல் நிலைக் காவலர் – ரூ. 50/–
- ❖ இரண்டாம் நிலைக் காவலர் – ரூ. 40/–

**குடியரசுத் தலைவரின் பாராட்டத்தக்க பணிக்கான சீர்திருத்த பணி பதக்கம்:**

இப்பதக்கமானது சிறைப் பணியாளர்களது நேர்மை, கடமை பற்றுறுதி மற்றும் கடின உழைப்பு ஆகியவற்றிற்காக ஆண்டிற்கு இரண்டு முறை அதாவது, குடியரசு தினம் மற்றும் சுதந்திர தினத்தன்று வழங்கப்படுகிறது. 2011–ஆம் ஆண்டில் சுதந்திர தினத்தையொட்டி 5 நபர்களுக்கு இப்பதக்கம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2012–ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று, 4 நபர்களுக்கு இப்பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

**கருணைத் தொகை வழங்குதல்:**

சிறைப்பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும் போது வீரதீரச் செயல்களில் ஈடுபட்டு இறக்க நேரிட்டால் அவரின் சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு, பணியாளர் இறுதியாக பெற்ற ஊதியம், அவர் உயிரோடு இருந்தால் பணிமூப்பில் ஓய்வு பெறும் நாள் எதுவோ அதுவரை குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. சிறைஅலுவலர்களின் குடும்பத்தினருக்கு

கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு கருணைத் தொகை வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | வீர மரணம் அடைவோர் | : | ரூ. 2,00,000/- |
| 2. | நிரந்தர ஊனம் அடைவோர் | : | ரூ. 50,000/- |
| 3. | படுகாயம் அடைவோர் | : | ரூ. 10,000/- |
| 4. | சாதாரண காயம் அடைவோர் | : | ரூ.5,000/- |

**பணியாளர்களின் குறை தீர்க்கும் முறை:**

சிறைத்துறையின் மூத்த அதிகாரிகளால் தங்கள் கீழ் பணியாற்றும் அலுவலர்களது குறைகளை கேட்டறிய கீழ்க்கண்டவாறு குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | கூடுதல் காவல்துறை இயக்குநர் /சிறைத்துறைத் தலைவர். | : | மூன்று மாதத்திற்கு ஒருமுறை |
| 2. | சரக சிறைத்துறைத் துணைத் தலைவர். | : | மாதமொருமுறை |
| 3. | மத்திய சிறை கண்காணிப்பாளர் | : | வாரமொருமுறை |

சிறைப்பணியாளர்களின் குறைகள் கேட்டறியப்பட்டு, அவைகள் விரைவாக தீர்க்கப்படுகின்றன.

**மிகை நேர பணி ஊதியம்:**

வாராந்திர ஓய்வு நாளன்று பணிபுரியும் சிறை பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.200/– வீதம் மிகை நேரப்பணி ஊதியம் வழங்கப்பட்டுவருகிறது.

**இதர படிகள்:**

நெருக்கடி நிலையின்போதும், பெருந்திரளானவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அனுமதிக்கப்படும் போதும், சென்னையிலுள்ள மத்திய சிறை தவிர இதர மத்திய சிறைகளில் பாதுகாப்புப் பணிகளில் அமர்த்தப்படும் களப் பணியாளர்களில் இரண்டாம் நிலை சிறைக்காவலர்களுக்கு ரூ.35/– வீதமும், முதல் நிலை சிறைக்காவலர்களுக்கு ரூ.40/– வீதமும், துணை சிறை அலுவலர் பதவி வரையில் உள்ள மற்ற அனைவருக்கும் ரூ.50/– வீதமும் உணவுக் கட்டணம் வழங்கப்படுகிறது. சென்னையிலுள்ள மத்திய சிறையில் மட்டும் அனைத்து பணியாளர்களுக்கும் ரூ.80/– உணவுக் கட்டணமாக வழங்கப்படுகிறது. காவல்துறை பணியாளர்களுக்கு இணையாக சிறைத்துறையில் பணிபுரியும் களப்பணியாளர்களுக்கு வழங்கப்படும் இடர்ப்படி இரண்டாம் நிலைக் காவலர் முதல் துணை சிறை அலுவலர் வரை மாதம் ரூ.300/– வீதமும், சிறை அலுவலர் முதல் கண்காணிப்பாளர் வரை மாதம் ரூ.350/– வீதமும் 2011–2012–ஆம் ஆண்டில் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைக் காவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையிலான பணியாளர்களுக்கு ஆண்டு தோறும் இரண்டு ஜோடி சீருடைகள் தைப்பதற்காக ரூ.500/– தையற் கட்டணமாக

வழங்கப்படுகிறது. மத்தியச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளியில் பணிபுரியும் இரண்டாம் நிலைக்காவலர்கள் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரையிலான பணியாளர்களுக்கு மாதம் ரூ.200/– சலவைப் படியாக வழங்கப்படுகிறது.

**VIII. புதிய முயற்சிகள்:**

**சிறைகளில் மோப்ப நாய் பிரிவு:**

தடைசெய்யப்பட்ட பொருட்களான போதைப் பொருட்கள், செல்லிடத்துப்பேசி மற்றும் வெடிபொருட்கள் போன்றவை சிறைக்குள் கடத்தப்படுவதை கண்டறிவதற்காக, புழல் மத்திய சிறை–1 மற்றும் 2, வேலூர், கடலூர், திருச்சி, மதுரை, பாளையங்கோட்டை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மத்திய சிறைகளில் தலா 2 மோப்ப நாய்கள் அடங்கிய மோப்ப நாய் பிரிவு ரூ.18.72 இலட்சம் செலவில் ஏற்படுத்த ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி 18 நாய்க் குட்டிகள் வாங்கப்பட்டு சென்னை மற்றும் கோவையில் உள்ள தமிழ்நாடு காவல் துறையின் மோப்ப நாய் பயிற்சி நிலையத்தில் நாய்க்குட்டிகளுக்கும் அதன் பொறுப்பாளர்களுக்கும் 9 மாதம் பயிற்சி அளிக்கப்பட்டது.

**தகவல் தொழில் நுட்பம்:**

அனைத்து மத்திய சிறைகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய தகவல் மையத்தின் உதவியுடன்,

‘‘சிறைவாசிகளின் தகவல் அமைப்பு முறை’’ குறித்த ஒரு மென்பொருள் உருவாக்கப்பட்டு சிறைகளில் பயன்பாட்டில் உள்ளது.

ஒளிவுமறைவு இல்லாத நிர்வாகத்தினை ஏற்படுத்தவும் சிறைத்துறையின் செயல்பாடுகளை பொதுமக்கள் அறிந்துகொள்ள ஏதுவாகவும் தேசிய தகவல் மையத்தினரால் வடிவமைக்கப்பட்ட பின்வரும் வலைதளம் சிறைத்துறையால் தொடங்கி வைக்கப்பட்டது.

www.tn.nic.in/prisons

www.tn.gov.in/prisons

**நுண்ணறிவு மற்றும் விழிப்புப் பணிப்பிரிவு:**

காவல்துறையிலிருந்து மாற்றுப் பணியின் மூலம் பணியமர்த்தப்பட்ட ஒரு பிரிவினரும் காவல்துறையிலிருந்து இதர பணி நிமித்தமாக பணியமர்த்தப்பட்ட மற்றொரு பிரிவினையும் கொண்ட நுண்ணறிவுப் பிரிவு ஒன்று சிறைத்துறையில் உள்ளது. இப்பிரிவு, சிறை நிருவாகத்தினை திறம்பட கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க சிறைவாசிகளின் நடவடிக்கைகளை கண்காணிப்பதுடன் முக்கியமான மற்றும் கூருணர்வு தகவல்களையும் சேகரிக்கிறது.

**தொழில் நுட்பப் பிரிவு தோற்றுவித்தல்:**

சிறைச்சாலைகளில் பயன்படுத்தப்பட்டு வரும் நவீன தொழில் நுட்ப கருவிகளை சிறந்த முறையில் பராமரிப்பு செய்திட 1 ஆய்வாளர் (தொழில்நுட்பம்) பணியிடமும் 10 சார் ஆய்வாளர் (தொழில்நுட்பம்) பணியிடங்களும் புதிதாக தோற்றுவிக்கப்பட்டது.

**பகுதி–II திட்டங்கள்:**

2012–2013ஆம் ஆண்டுக்கான பகுதி–II திட்டத்தின் கீழ், ரூ.67.10 இலட்சம் மதிப்பிலான கீழ்க்காணும் புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் விபரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சென்னை மற்றும் கோயம்புத்தூர் சரக கட்டுப்பாட்டில் உள்ள கிளைச்சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், பார்ஸ்டல் பள்ளிகள் மற்றும் மாவட்ட சிறைகளின் உபயோகத்திற்கு 50 கணிப்பொறிகள், அச்சு இயந்திரம், தடையில்லா மின்சாரம் வழங்கும் கருவி மற்றும் அறைகலன்கள் வழங்குதல். | 25.93 |
| 2. | சிறைத்துறை தலைமை அலுவலகம், சென்னை மற்றும் 9 மத்திய சிறைகளிலும் தற்போது | 12.11 |

| வ. எண் | திட்டத்தின் விபரம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | உபயோகப்படுத்தப்பட்டு வரும் எலக்ட்ரானிக் ஃபிராங்கிங் மெஷின்களுக்கு பதிலாக 10 நவீன ரக ஃபிராங்கிங் மெஷின்களை (Remotely Managed Franking System) கொள்முதல் செய்தல். | |
| 3. | கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறைத் தலைவர் அலுவலகம் மற்றும் மதுரை மத்திய சிறை கண்காணிப்பாளர் அலுவலகங்களுக்கு 2 இரு சக்கர வாகனங்கள் துணை பாகங்களுடன் வழங்குதல். | 1.50 |
| 4. | திருச்சி மற்றும் கோவை சரக சிறைத்துறை துணைத் தலைவர் அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டு பயனற்றதென கழிவு செய்யப்பட்ட சீரூந்துகளுக்கு பதிலாக 2 புதிய சீரூந்துகள் கொள்முதல் செய்தல். | 11.00 |
| 5. | கோவை, மதுரை மற்றும் பாளையங்கோட்டை மத்திய சிறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டு பயனற்றதென கழிவு செய்யப்பட்ட சீரூந்துகளுக்கு பதிலாக 3 புதிய ஈப்புகள் கொள்முதல் செய்தல். | 16.56 |
| | **மொத்தம்** | **67.10** |

## IX. முடிவுரை:

தமிழக சிறைத்துறை அதற்கென வரையறுக்கப்பட்ட பணியினை நிறைவேற்றும் வகையில் திறம்பட செயல்பட்டு வருகிறது. சிறைவாசிகள் சிறைகளில் கண்ணியத்துடன் நடத்தப்படுகிறார்கள். சிறைவாசிகளுக்கு தரமான உணவு வழங்குவதன் மூலம் அவர்களது ஆரோக்கியம் உறுதி செய்யப்படுகிறது. மருத்துவ நிபுணர்களால் சிறைவாசிகளுக்கு குறித்த கால இடைவெளியில் உடல் நலன் பரிசோதிக்கப்படுகிறது. சிறைவாசிகளின் விடுதலைக்குப் பின்னர் தமது வாழ்க்கையினை நடத்துவதற்கு கல்வியறிவு மற்றும் தொழிற்திறன் சார்ந்த பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. சுருக்கமாக, சிறைத்துறை, சிறைவாசிகள் தான் செய்த தவறுக்கு வருந்தி, அதனால் திருந்தி பின்னர் புதிய நல்வாழ்வு வாழ வகை செய்கிறது.

**சி.வி.சண்முகம்**
**வணிகவரி & பதிவுத்துறை, சட்டம்,**
**நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்**
**துறை அமைச்சர்**

# சிறைத்துறையின் நிர்வாக அமைப்பு வரைபடம்




<u>குறிப்பு:</u>

மத்திய சிறை கண்காணிப்பாளர்களின் அதிகார வரம்பிற்குட்பட்ட மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்டச் சிறைகள், தனிக் கிளைச்சிறைகள் மற்றும் கிளைச்சிறைகள் அவர்களது கட்டுப்பாட்டில் செயல்படும்.